**தங்காலை பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தங்காலை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கு மீதி ரூபா 8,228,603 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தமையால், அப் பெறுமதிக்கு தொங்கல் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் நாட்குறிப்புக்கள் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப் படுகின்றன. | | |
| | • 2017 ஆண்டு ஆரம்பத்தில் நிதிக் கூற்றுக்கள் மற்றும் பேரேட்டில் திரண்ட நிதியக் கணக்கு ரூபா 17,399,501 இற்கான வித்தியாசத்தை ரூபா 3,535,925 தொகை என சீராக்கல் செய்திருந்த காரணத்தினால் ரூபா 13,863,576 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | பேரேட்டுக் கணக்குகளின் சரியான மீதி நிதிக் கூற்றுக் களுக்கு எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | • முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் மற்றும் பேரேட்டில் திரண்ட நிதிய மீதியிடையே ரூபா 4,691,887 இற்கான தொகையினை இனங்காணாமல் திரண்ட | தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்ட பின்னர் சீராக்கல் மேற்கொள்ள | கணக்காய்வுப் பந்தியை ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்திற்கு மீண்டும் வரவு வைக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | |
| | • முன்னைய ஆண்டு திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 4,691,887 இற்கான மீதியில் ரூபா 4,674,634 தொகை மீளாய்வாண்டில் இனங்கண்டிருந்த துடன், இனங்காணப்படாத ரூபா 17,253 இற்கான மீதி தொங்கல் கணக்கு ஒன்றில் காட்டப்பட்டிருந்தது. | இனங்காணப் படாத மீதி தொங்கல் கணக்கில் காட்டப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது சபை ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,056,002 இற்கான செலவினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாண வேலை கடன்கொடுத்தோருக்காக ரூபா 1,000,000 தொகை மிகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | முன்னைய ஆண்டின் ரூபா 343,782 இற்கான வருவாய்ச் செலவினம் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப் படுத்தியிருந்ததை சரி செய்வதற்காக மீண்டும் அதே பெறுமதியினால் மூலதனப் படுத்தியிருந்தமையினால் காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 687,564 தொகையினால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்தல் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | கடந்த ஆண்டில் உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்த 04 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 345,000 தொகைக்கான ஒரே தடவையில் பெறும் பணத்தினை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | 2014 முதல் மீளாய்வாண்டு வரை கடையறைகள் தொடர்பாக அறவிடப்பட்ட ரூபா 2,802,312 இற்கான ஒரே தடவையில் பெறும் பணம் முக்கிய பண வைப்பு என வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | ஒரே முறையில் பெறும் பண வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | மீளாய்வாண்டிற்கான சபை கட்டிடங்களை துப்பரவு செய்வதற்காக செலுத்தப் பட்டிருந்த ரூபா 129,500 தொகை மூலதனச் செலவு ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தவறுதலாக இது ஏற்பட்டது எனவும் எதிர்காலத்தில் இவ்வாறு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (viii) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான பாதை ஒன்றினை விரிவாக்குவதற்காக காணி உரித்தாக்கல் தொடர்பாக பிரதேச செயலாளரிடம் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 157,500 தொகை நிலையான வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முதலீடுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 06 கணக்கு விடயங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 34,688,242 தொகையான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 24,703,217 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் தொடர்பாக துணைப் பதிவேடுகள் சரியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வித்தியாசத்தை பரிசோதனை செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 128,316,827 தொகைக்கான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விரிவான அட்டவணை எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப் படுவதுடன் உரிமைய உறுதிப் படுத்துதல் தொடர்பான உரிய பிரிவுகளுக்கு அறிவூட்டப்பட்டு வருவதுடன் சொத்துக்கள் கணிப்பீடும் மேற்கொள்ளப் பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(1) | சபையினால் முன்னைய ஆண்டில் 04 கிராம சேவையாளர் பிரிவுகளை முன்னேற்றப்பட்ட பிரதேசங் கள் என இனங்கண்டிருந்த போதிலும் வீதவரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஜனவரி 20 ஆந் திகதி மாதாந்த பொதுக் கூட்டத்தில் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வது தொடர்பாக அங்கீகாரம் கிடைத் திருந்தமையால் அதன் தொடர் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவையின் விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களுக்காக மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று தயாரித்தி ருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அடுத்த வருடம் வழங்கு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| | (i) நி.பி. 571 | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 735,266 இற்கான வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | (ii) நி.பி. 702(3) | ஒப்பந்த வேலைகளுக்காக கையொப்பமிடும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டு முதல் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஈ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை
----------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| i. | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்குச் சொந்தமான 08 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 08 வாகனங்களில் 02 இன் மைலோ மீற்றர் செயற்படாது காணப்படல், 02 வாகனங்களின் நீர்த் தொட்டிப் பகுதி மாத்திரம் காணப்படுவதனால் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற் கொள்ள முடியாததுடன், 04 வாகனங்களின் இந்த பரிசோதனை 2020 ஜூன் மாதம் மேற்கொள்ளப் பட்டதென அறிவிக்கின்றேன். |
| ii. | 2015 ஒக்தோபர் 09 திகதிய PED/ REG/2015/08 பொது(i) இலக் கங் கொண்ட கடிதத்தின் பந்தி கள் 4.3(அ),(உ) இன் பிரகாரம் | முன்னைய ஆண்டு ஒன்று தொடர்பாக பெற வேண்டிய ரூபா 90,996 இற்கான ஊழியர் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | குறிப்பிட்ட கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அறவீடு செய்வதற்குரிய அலுவல்கள் மேற்கொள் ளப்படுகின்றதென அறிவிக்கின்றேன். |

(உ) ஏனைய சுற்றறிக்கைகள்
-----------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| i. | பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2020 ஜனவரி 30 திகதிய PFD/ RED/COPA/ 2019/01 இலக்கங் கொண்ட கடிதத் தின் 04 ஆம் பந்தி | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்திருக்க வில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| ii. | உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/ 2010/01 இலங்கங் கொண்ட சுற்றறிக் கையின் பந்திகள் 05 மற்றும் 06 | 08 கடையறைகளின் உடன்படிக்கைகள் மற்றும் 05 கடையறைகளின் பெறுமதி மதிப்பீட்டை நாளது வரை ஆக்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 கடையறைகளின் உடன்படிக்கைகள் நாளது வரை ஆக்கப்பட்ட தெனவும் மீதியான கடைகளின் உடன்படிக்கைகள் எதிர்காலத்தில் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 53,444,656 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,642,295 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடைமுறைக் கணக்கொன்று தொடர்பான வங்கி இணக்கக் கூற்றில் கையில் காசு ரூபா 750,000 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும், அத் திகதியில் உள்ளவாறு கையில் காசொன்று பௌதீக ரீதியாக காணப்படவில்லை. மேலும் இந்த மீதி மீளாய்வாண்டு ஆரம்பம் முதல் மாற்றம் அடையப்பட்டு முன்கொண்டு வரப்பட்ட மீதியொன்றாக காணப்பட்டமையால் வித்தியாசத்தை இனங்கண்டு வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணக்கஞ் செய்யப் படாத மீதிகளை இனங்கண்டு வங்கி இணக்கக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பணம் வைப்புச் செய்யப் பட்ட போதிலும் பி.ச.10 மற்றும் பி.ச.02 அறிக்கை களில் பதிவு செய்யப்படாத குறைபாடு காரணமாக வித்தியாசம் ஒன்று ஏற்பட்டி ருந்தமையால் இது வரை கண்டுபிடிக்க முடியாமல் இருந்த மீதி ரூபா 306,438 தொகை ஆகக் காணப்பட்ட துடன் 2017 ஆண்டிற்கான வங்கி இணக்கக் கூற்றுக்கள் மீண்டும் தயாரிக்கப்பட்டு கணக்கு களை சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 570,000 | 913,606 | 920,686 | 635,947 | 560,000 | 930,786 | 823,238 | 382,909 |
| வாடகை | 6,625,930 | 6,918,542 | 8,285,540 | 1,874,465 | 4,611,000 | 6,433,930 | 6,389,672 | 1,489,282 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,000,000 | 5,599,260 | 5,922,152 | - | 3,000,000 | 2,536,269 | 2,536,269 | - |
| ஏனைய வரு மானங்கள் | 25,500,000 | 65,428,610 | 82,164,223 | 123,085,441 | 15,500,000 | 30,183,903 | 15,620,130 | 89,625,228 |
| மொத்தம் | 35,126,500 | 78,860,018 | 97,292,601 | 125,595,853 | 23,671,000 | 40,084,888 | 25,369,309 | 91,497,419 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 424 வியாபார அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார வரி ரூபா 466,140 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் 150(4) பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. மேலும் அம் மீதியில் 46 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 107,450 தொகை 2016 முதல் 2018 வரையான ஆண்டுகளுக்குரியவை ஆகும். | நிலுவை வியாபார வரி வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வியாபார வரித் தொகையில் ரூபா 46,850 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், நாட்டில் காணப்படும் கொரோனா வைரஸ் காரணமாக மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்ய முடியாமல் போனதுடன் அந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான நிலுவை வியாபார வரி முறையே ரூபா 121,440 தொகை மற்றும் ரூபா 358,690 தொகைகள் காணப்பட்டமையால் நிலுவை 195 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | நிலுவை வியாபார வரி வருமானத்தை அறவீடு செய்யும் முன்னேற்றத்தை அதிகரிக்க வேண்டும். | கணக்காய்வு அறிக்கையில் நிலுவை வியாபார வரி மற்றும் இறுதிக் கணக்குகளுடன் வழங்கப்பட்டிருந்த அட்டவணைகளின் படி வித்தியாசம் ஒன்று காணப்படுவதுடன், 2018 மற்றும் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வியாபார வரி முறையே ரூபா 181,890 மற்றும் ரூபா 466,140 தொகை ஆகக் காணப்பட்டதுடன், நிலுவைத் தொகையில் ரூபா 46,850 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், நாட்டில் காணப்பட்ட கொரோனா வைரஸ் காரணமாக மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு முடியாமல் போனதுடன் அத் தொகையை அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ஏக்கர் வரி மீதி ரூபா 169,807 தொகையாக காணப்பட்டதுடன், அம் மீதியில் முன்னைய ஆண்டுகளுக்கான ரூபா 155,534 தொகையும் காணப்பட்டது. | வருடாந்த கணிப்பீடு மேற்கொண்டு நிலுவை ஏக்கர் வரி வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 2,526 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், வதிவிடத்தை விட்டுச் செல்லல், காணிகள் துண்டுகளாக பகிரப்படல், விற்பனை செய்யப்படல் ஆகிய காரணங்களினால் 2015 முதல் 2018 ஆண்டு வரை நிலுவை கூடிய பெறுமானம் ஒன்றினை பெற்றிருந்தது. |

### 2.3.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 43 கடையறைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய கடை வாடகை மற்றும் தண்டப்பணம் முறையே ரூபா 860,829 தொகை மற்றும் ரூபா 45,125 தொகை ஆகும். | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | இது வரை நிலுவைத் தொகையில் ரூபா 140,290 தொகை மற்றும் தண்டம் ரூபா 7,423 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான நிலுவைக் கடை வாடகை முறையே ரூபா 422,759 தொகை மற்றும் ரூபா 860,829 தொகைகள் காணப்பட்டமையால் நிலுவை 104 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | நிலுவைக் கடை வாடகை வருமானம் சேகரிக்கும் முன்னேற்றத்தை அதிரகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான நிலுவைகளில் 2017 பெப்ரவரி 15 திகதி சீல் வைக்கப்பட்ட 07 கடைகள் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 370,370 தொகையும் அடங்கியுள்ளதுடன், அந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக 2018 மார்ச் 08 ஆந் திகதி கோவை ஒப்படைக்கப் பட்டுள்ளது. நிலுவைத் தொகையில் ரூபா 140,290 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மீதியான ரூபா 322,485 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். |
| (இ) | சபையின் ஆதனங்களை வாடகைக்கு கொடுப்பதன் மீது மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 05 ஆதனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய வாடகை மற்றும் தண்டப்பணம் முறையே ரூபா 513,825 தொகை மற்றும் ரூபா 500,072 தொகையாக காணப்பட்டதுடன் அம் மீதியில் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி மற்றும் 05 வருடங்களுக்கு மிகையான மீதி முறையே ரூபா 29,922 தொகை மற்றும் ரூபா 608,874 தொகை காணப்பட்டது. மேலும் 05 வருடங்களுக்கு மிகையான மீதி மொத்த நிலுவையில் 60 சதவீதமாக இருந்தது. | நிலுவை வாடகை மற்றும் தண்டப்பண வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டில் ஏற்பட்ட பாஸ்கு தாக்குதல் காரணமாக ரன்ன மற்றும் நோனகம வாராந்த சந்தைகள் நடாத்தப்படாமையால் முறையே ரூபா 64,685 தொகை மற்றும் ரூபா 34,915 தொகை பதிவழிப்பதற்காக ஆளுனருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 4,857,999 தொகை மற்றும் ரூபா 118,095,249 தொகை காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களில் ரூபா 12,500,000 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 29 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகளை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தங்காலை நகர பிரதேசம் ஒன்று ஆகும். அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தலுக்கான கட்டணங்கள் தொடர்பாக சிக்கல் நிலைமை காணப்படுவதால் அந்த துணை விதியை தழுவியிருக்க வில்லை என அறிவிக்கின்றேன். |

## (ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் 24 அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 13,900,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,300,000 செலவிடப்பட்டு 05 திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றப் பட்டிருந்ததுடன், அபிவிருத்தி திட்டங்களில் உட்படுத்தி இருக்காத 06 செயற்திட்டங்களுக்காக ரூபா 5,059,759 தொகை செலவிடப் பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. மூலதன உதவியின் கீழ் 23 செயற் திட்டங்களுக்காக ரூபா 21,200,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,512,846 தொகை செலவிற்கான ஒரு செயற்திட்டம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. | வருடாந்த பாதீட்டில் உட்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி செயற் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். | 2019 பாதீட்டில் மூலதனச் செலவுகளின் கீழ் உத்தேசிக்கப் பட்ட 23 செயற்திட்டங்கள் காணப்பட்ட போதிலும், சபையில் காணப்பட்ட நிதி நிலைமை போலவே அவ்வாண்டில் நிலவிய காலநிலை மற்றும் தட்பவெப்பாஷ்ண நிலை மீது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களுக்கு கூடிய பயனைத் தரக் கூடிய நிர்மாண வேலைகள் மாத்திரம் நிறைவேற்றினேன். |

## (இ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு சபை நிதியத்தில் இருந்து நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 675,853 தொகைக்கான தலைமை அலுவலகத்துக்கு முன்பக்க காவல்குடில் நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. | அபிவிருத்தி வேலை களுக்காக ஒதுக்கப் பட்ட பணம் தாமதம் இன்றி ஈடுபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து நிறைவேற்றுவதற்கா திட்டமிட்டிருந்த இந்த நிர்மாண வேலையின் மதிப்பீட்டினை உள்ளூராட்சி திணைக் களத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களினால் வேலை தாமதமாகியதுடன் தற்போது ஒப்பந்த அமைப்புக்கு மீண்டும் வேலை ஆரம்பிக்கும் படி கடித மூலம் அறிவித்துள்ளேன் என அறியத் தருகின்றேன். |

## (ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 2015 திசெம்பர் 09 திகதிய கடிதத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நிபந்தனைகள் காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றை நிறைவேற்றுவதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறைப்பிரகாரம் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ள நிபந்தனைகளின் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டதுடன், மீதித் தொகையும் இவ்வருடத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கிறேன். |

### (உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவீடு செய்ய வேண்டும். | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

#### ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 03 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் 45 மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் மிகைகளை முறைப்படுத்து வதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 வெற்றிடங்களை நிரப்பு வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 02/2018 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை யின் படி ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மற்றும் மனிதவள திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய உடன்படிக்கைகள் மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் மனிதவள திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. சபை கடந்த வருடங்களில் வழங்கியிருந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்கள் மற்றும் அவற்றின் செல்லுபடியாகும் காலம் பற்றி முறையான மற்றும் நாளதுவரையான தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டும். | குறைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதி வரை சபையினால் அனுபவிக்கப்படும் 30 காணிகள், 09 கட்டிடங்கள் மற்றும் 09 வாகங்களின் சட்ட ரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது சபையினால் அனுபவித்து வரும் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை பிரதேச செயலகத் திற்குரிய ஆதனங்களை சபைக்கு உரித்தாக்கித் தரும்படி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 09 வாகனங்களில் 02 கடன் தவணை செலுத்தி முடிந்திருக்காமையால் உரித்தாக்கப்படவில்லை. ஒரு வாகனம் உரித்தாக்கப்பட்டிருந்த துடன், 06 வாகனங்களை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். |

### 3.4.2 விளைவற்ற/ குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| நெடொல்பிடிய மற்றும் ரன்ன நூலக வளவில் 02 கடையறைகள் மற்றும் 02 டபள்கப் வண்டிகள் முறையே 2011 மற்றும் 1996 ஆண்டுகள் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், அச் சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்கோ அல்லது திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கடைகளை டென்டர் பண்ணுவதற்காக பல சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரம் பிரசுரித்த போதிலும் அதற்காக கேள்விதாரர் எவரும் முன் வராததுடன், கப் வண்டியை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 இன் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்திகள் 4.2.1 மற்றும் 4.2.3 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக முறையான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டிற்காக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும் அதில் காணப்பட்ட குறைபாடுகள் முறைப்பிரகாரம் தயாரிப்பதற்கும் 2020 ஆண்டில் சரியாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 சந்தர்ப்பங்களில் ரூபா 909,674 தொகைக்கான வீதிவிளக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்தல், 04 சந்தர்ப்பங்களில் ரூபா 197,250 இற்காக டோனர் கொள்வனவு செய்தல், 02 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 150,000 இற்கான டிக்கட்கள் அச்சிடுதல் மற்றும் கேட்போர் கூடத்திற்கு கேட்கும் வசதிகள் மற்றும் ஒளிப்பதிவு வசதிகள் பெற்றுக்கொள்வதற்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 1.3.2 இற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல், டோனர் கொள்வனவு செய்தல் ஆகியவற்றிக்காக நிதி மற்றும் கொள்கைக் குழுவின் மூலம் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு 06 மாத காலப் பகுதியில் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டதுடன், டிக்கட்கள் அச்சிடுதல் நிதி மற்றும் கொள்கைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் கேட்போர் கூடத்திற்கு கேட்டும் வசதிகள் ஒளிப்பதிவு வசதிகள் பெற்றுக்கொள் வதற்காக பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டதென அறிவிக்கின்றேன். |
| (ஆ) | சபையின் பெறுகை 03 இற்காக கூறுவிலை அழைத்தல் மேற்கொள்வதற்கு முன்னர் விலைகூறல் தாரர்கள் கூறுவிலை அனுப்பியிருந்தமையால் பெறுகை விடயங்கள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகை அலுவல்கள் வெளிப்படைத் தன்மையாக நடைபெற வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |